# திருக்குறள் என்றைக்குமான இலக்கியம்

திருக்குறள் பன்னாட்டு மாநாட்டில்
வாசிக்கப்பெற்ற கட்டுரைகளின் தொகுப்பு



வெளியீடு:
மாவட்ட நிர்வாகம், விருதுநகர்

| | | | |
|---|---|---|---|
| 51. | புலவர். இரா.மாரியப்பன் | வாழ்வின் உரைகல் திருக்குறள் | 172 |
| 52. | கொ. மா. கோதண்டம் | உலகச் செம்மொழித் தமிழ் திருவள்ளுவரும் சுந்தரத் தெலுங்கு வேமனாவும் | 176 |
| 53. | முனைவர் மு.பழனியப்பன் | திருக்குறளும் செயற்கை நுண்ணறிவியலும் | 183 |
| 54. | இலக்கிய செல்வி மு.ராஜேஸ்வரி | திருக்குறள் என்றைக்கும் தேவையான இலக்கியம் | 188 |
| 55. | முனைவர். பேரா. க. அழகர் | வள்ளுவர் காட்டும் மானுட மேம்பாட்டுச் சிந்தனைகள் | 194 |
| 56. | திரு.ச.விக்னேஷ் (சீரானைச்சிறுவன்). | திருக்குறளும் திருமந்திரமும் - ஓர் ஆய்வு (திருஞானசம்பந்தர் திருக்கடைக்காப்பில் ஒரு நுனித்த நோக்கு) | 198 |
| 57. | ஜெ.ஜமுனாராணி | குறள் கற்பிக்கும் 'ஆமை'கள் | 202 |
| 58. | முனைவர்பெ.ஆனந்தி | திருக்குறளில் வினாவிடை உத்தி | 209 |
| 59. | தி. தருண்சர்மா | திருக்குறளில் உயிரினங்கள் | 214 |
| 60. | தை.அந்தோணி ராஜ் | திருக்குறளில் கணிதவியல் சிந்தனைகள் | 218 |
| 61. | முனைவர் வே. அழகுமுத்து | திருக்குறளும் சித்தர் நெறியும் | 223 |
| 62. | முனைவர் ரா.திவ்யா | திருக்குறள் காட்டும் உழவியல் | 228 |
| 63. | முனைவர் ஆ.பூமிச்செல்வம் | தமிழ் நாவல்களில் திருக்குறளின் தாக்கம் | 232 |
| 64. | முனைவர் செ.சாந்தி | பெண்ணிய நோக்கில் களவியல் (தொல்காப்பியம், திருக்குறள் ஒப்பீட்டாய்வு) | 239 |
| 65. | ஆ.முருகேசன் | முப்பாலில் சிரஞ்சீவித்துவம் | 244 |
| 66. | முனைவர் இரா உஷாராணி | திருக்குறளில் உணவும் பழக்க வழக்கக் கோட்பாடுகளும் | 250 |
| 67. | முனைவர் கு. செல்வஈஸ்வரி | வள்ளுவனின் குறளும் விவேகானந்தரின் வித்தும் (வாழ்வியலை முன்வைத்து) | 255 |
| 68. | முனைவர் பெ. ஜெயமாரி | திருக்குறளில் சுற்றுச்சூழல் கருத்துக்கள் | 260 |
| 69. | முனைவர் மு.சங்கர் | திருக்குறள் - பொருட்பாலில் இடைச்சொற்கள் | 264 |
| 70. | முனைவர் வெ.பரிமளம் | வள்ளுவரின் பல்துறைச் சிந்தனைகள் | 270 |
| 71. | பேரா. ச. மைதிலிராஜ் | திருவள்ளுவமாலையில் உவமைக்கூறுகள் | 274 |
| 72. | முனைவர் க.கந்தசாமி பாண்டியன் | மு.ரா.அருணாசலக் கவிராயரும் திருக்குறளும் | 279 |
| 73. | க.வாணி தேவி | திருக்குறள் காட்டும் உடலோம்பல் | 282 |
| 74. | முனைவர் தே. இராணி எலிசபெத் | திருக்குறளில் நிர்வாக மேலாண்மை | 285 |

# 62. திருக்குறள் காட்டும் உழவியல்

முனைவர் ரா.திவ்யா
உதவிப்பேராசிரியர் என்.ஜி.எம்.கல்லூரி
பொள்ளாச்சி. 9942232270

**த**மிழ் இலக்கியம் பழமைத் தன்மை வாய்ந்தது. நீண்ட நெடிய வரலாற்றுப் பாரம்பரியம் மிக்கது. மக்களின் வாழ்க்கை முறைகளை எடுத்துக் கூறும் கருவூலமாகவும் உள்ளது. தமிழ் இலக்கியங்கள் மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிப்பதற்கும் மகிழ்விப்பதற்கும் எழுந்தது என்றாலும் கூட நற்செய்திகளை அறிவிப்பதும் நோக்கமாக இருந்தமை உணர முடிகிறது. உலகில் உள்ள உயிரினங்களில் மிகவும் இன்றியமையாதது மனிதப் படைப்பாகும். சமுதாயம் தன்னிறைவு படுத்திக் கொள்ள அடிப்படைத் தேவைகளைச் சரிசெய்து கொள்வதாகும். இம்மனிதன் உயிர் வாழ்வதற்கு அடிப்படைத் தேவையாக அமைவது உணவு, உடை, உறைவிடம் ஆகும். அவற்றில் உணவு முக்கிய தேவையாக அமைந்திருப்பது சிறப்பாகும். உலக நாகரிகத்தின் எதனைப் புரட்டிப் பார்த்தாலும் அவற்றில் வேளாண்மை மக்கள் வாழ்க்கையோடு ஒன்றியிருக்கிறது. நிலத்தினை ஐவகையாகப் பாகுபடுத்தினர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என அனைத்தினையும் அவர்களின் தொழில், உணவுப்பழக்கம், வாழ்க்கைமுறை போன்றவையோடு விளைநிலங்களின் தன்மைக்கு ஏற்ப பிரித்தனர்.

மனிதன் வாழ்வாங்கு வாழ அடிப்படையே வேளாண்மை. அதனைத் திருவள்ளுவர் எடுத்துரைத்திருப்பது வாழ்வதற்கு அடிகோலமைக்கிறது. திருக்குறளில் பல தொழில்களைப் பற்றிக் கூறினாலும், சில தொழில்கள் பற்றி வெளிப்படையாகக் கூறுகிறார். அவற்றில் உழவுத்தொழில், வாணிகம், மருத்துவம், மீன்பிடித்தல், பல்வகை உலோகத்தொழில், சிவிகைகள், அவையங்கள், பாவை புனையும் தொழில், கட்டிடத்தொழில், தேர், சகடங்கள் கட்டும் தொழில்கள், இன்னோரன்ன பல தொழில்கள் பற்றிப் பேசுகிறார். இவற்றில் உழவு பற்றிப் பேசும் அதிகாரமும் இருக்கிறது.

நிலத்தினை ஐவகையாகப் பாகுபடுத்தினர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என அனைத்தினையும் அவர்களின் தொழில், உணவுப்பழக்கம், வாழ்க்கைமுறை போன்றவையோடு விளைநிலங்களின் தன்மைக்கு ஏற்ப பிரித்தனர்.

மற்றொரு பாடலில் உழும் போது சால் போகும் வழியை கவனிக்க வேண்டும் என்பதை,

"சால் நெறிப் பாரா உழவனும் தன் மனையில்
மானம் ஒன்று இல்லா மனையாளும் சேனை
உடன்கொண்டு மீளா அரசும் - இம்மூன்றும்
கடன் கொண்டார் நெஞ்சில் கனா"

(திரிகடுகம்- 3)

என்ற பாடலின் வழி வெளிப்படுத்தியுள்ளார். உழும் படைச்சாலை நேராகப் பார்க்காத உழவன், மனையில் இருந்து கொண்டு மானம் காக்காத மனைவி, படையை உடன் கொண்டு செல்லாத அரசன் என்று எடுத்துரைக்கிறார்.

“இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு”(குறள்.81)

வீட்டில் இருந்து பொருள்களைக் காத்து இல்வாழ்க்கை நடத்துவதெல்லாம் விருந்தினர்களைப் போற்றிப் பாதுகாப்புச் செய்யும் பொருட்டாகும் என்று கூறுகிறார்.

“தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தன் பொருட்டு”(குறள்.212)

ஒப்புரவாளன் தன்னால் இயன்ற முயற்சி செய்து சேர்த்த பொருளையெல்லாம் தக்கவர்க்கு உதவி செய்தல் பொருட்டாகும்.

**வேளாண்மை**

வேளாண்மையில் பயன்படுத்தப்படும் இயற்கை உரமே வேளாண்மை உற்பத்திக்கு அடிப்படையானது. உயிரியல் உரங்கள். பசுந்தாள் உரங்கள். இயற்கைக் கழிவுகள். மக்கிய குப்பைகள். மக்கிப் போன இலைதழைகள் அறுக்கப்பட்ட தானியங்களின் எச்சங்கள் போன்ற உரங்கள் மண்ணுக்கு உயிரூட்டத்தைத் தரும்.

“ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்
நீரினும் நன்றுஅதன் காப்பு”(குறள்.1038)

என்ற குறளில் வேளாண்மை செய்யும் முறையினையும் சுட்டுகிறார். உழவன் நிலத்தை நன்கு ஏர் விட்டு உழுது பின் களை நீக்கல் வேண்டும். இந்த இரண்டும் செய்;த பின் களை நீக்கல் வேண்டும். களை நீக்கிய பிறகு நீர் பாய்ச்சுதலை விட அதனைக் காவல் காக்க வேண்டும் என்று இயற்கை வேளாண்மை செய்யும் முறையைத் திருவள்ளுவர் விளக்குகிறார். வேளாண்மைத் தொழில் மிகவும் நுட்பமானவை விதையைத் தேர்ந்தெடுக்கும் முறையாகும். அவற்றைப் பூச்சிகள் தாக்காமல் பாதுகாத்துக் கொள்ளுதலாகும். இதனை,

“குறித்து மாறு எதிர்ப்பை பெறா அமையின்
குரல் உணங்கு விதைத் திணை”

(புறநானூறு,333-11-12)

இப்பாடலில் விதையைக் காயவைத்து விதைக்க பயன்படுத்தியமையைக் கூறப்படுகிறது.

அதுபோல், மண்ணுக்குள் புதைந்துள்ள முத்தும், பொன்னும் கொழுவின் இருமடங்கிலும் ஒதுக்கித் தள்ளப்படுகின்றன. முணிகள் சிந்துகின்றன. கொழு ஆழப் பாய்ந்தமையால் சங்குகளில் பட்டு சஞ்சலம் என்று ஒலி எழுப்பி புலம்புகின்றன.

மீன்கள் மருதநிலத்தில் துள்ளி ஓடுகின்றன. கொழுவில் மாட்டிவிடாமல் ஆமைகள் தலையைச் சுருக்கிக் கொள்கின்றன. வயலிலுள்ள மீன்கள் அருகிலுள்ள மடைகளுக்குள் சென்று ஒளிந்து கொள்கின்ற என்பதை விளக்குகிறது. எனவே ஆழமாய் உழுவதால் தான் இந்த நிகழ்வு நடக்கிறது.

உழவு செம்மைப்படுவதற்கு இடத்திற்கு இடம் உழவின் எண்ணிக்கை மாறினாலும் கூட பொதுவாக நான்கு உழவோடு பயிர்த்தொழில் செய்வது என்பது இன்று நடைமுறையில் உள்ளது நான்கு உழவு போதுமானது. இதனை,

"தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்

வேண்டாது சாலப் படும்" குறள்- 1037

வேண்டாது சாலப் படும்என்பது வள்ளுவம் ஒரு பலம் எடையுள்ள கட்டியைக் கால் பலம் எடையுள்ள கட்டியாக மாற்ற வேண்டுமென்றால் நான்கு முறை உழ வேண்டும் என்பது தெளிவாகிறது. இதனை,

"முந்தித் தரிசடித்து முச்சாரியாய் மறித்து

நைந்திடவே சேறுகலக்கி நயமாக நாலுழவு"

என்று செங்கோட்டுப் பள்ளு வலியுறுத்துகிறது.

அறத்தை முதன்மையாக வைத்து அவ்வையார் ஆத்திசூடி அறம் செய்ய விரும்பு என்ற பாடல் வரிகள் மூலம் மனிதனின் அரசியலை செய்ய விரும்ப வேண்டும் என்று கூறியுள்ளனர் இதனை,

"கணவாய் இரப்பார்க்கொன்று அவர் கரவாதம்

கைசெய்தூண் மாலை யவர்" குறள்-1035

என்ற குறட்பா மூலம் உழவுத் தொழில் செய்யும் உழவர்கள் தம் கையால் உழுத அதன் மூலம் கிடைக்கும் உணவுப் பொருட்களை மற்றவர்களுக்கு உதவுவார்கள். மற்றவர்களிடமிருந்து பொருள் எதுவும் கேட்கவா என எண்ணிக் கேட்டு வாங்க மாட்டார்கள். அவர்கள் தங்களுடைய தொழிலை நேர்மையாகவும் அறத்தொடு செய்வார்கள். இவர்கள் தாமாகவே உணவை உற்பத்தி செய்வதால் யாரிடமும் கையேந்தி வாழும் நிலை ஏற்படாது என நம்பிக்கையாக இருப்பார்கள்.

**உழவுத்தொழில்**

உலகம் பல தொழில் செய்து சுழன்றாலும் இந்தத் தொழிலைப் பின்பற்றியே நிற்கும். அதனால் எவ்வளவு துன்பமானாலும் உழவுத்தொழில் சிறந்ததாகும். இதனை,

சுழன்று ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை (குறள்.1031)

என்ற குறளின் வழி வெளிப்படுத்தியுள்ளார். உழவுத் தொழிலில் வேலை மிகக் கடினமாக இருக்கும். மழை. வெயில் எதுவும் பாராமல் வேலை செய்வார்கள்.

உழவுத்தொழிலில் எருவிடல்

ஏர் உழுவதை விடப் பயிருக்கு எரு விடுதல் நல்லது. இத்துடன் களை எடுத்தலும் பயிர் காத்தலும் நீர் விடுதலும் நன்மை தரும் என்கிறார்.

"ஏரினும் நன்றால் எரு இடுதல் கட்டான்

நீரினும் நன்று அதன் காப்பு" குறள்-1038

என்று குறளின் வழி அறிய முடிகிறது. உழுத வயலின் மேடு பள்ளங்களைச் சரிசெய்யயத் 'தளம்பு' என்ற கருவியைப் பயன்படுத்தியதாகக் கீழ்க்காணும் புறநானூறு,

"மலங்குமிளிர் செறுவின் தளம்புதடிந் திட்ட" (புறம்.61-3)

குறிப்பிடுகிறது.

உழுத நிலங்களில் கால்நடைகளின் சாணத்தையும் இலைதளைகளையும் எருவாகப் பயன்படுத்தியதைப் பற்றி,

"காஞ்சித் தாது உக்கன்ன தாது எருமன்றத்துத்" (கலித்தொகை,108-60)

கலித்தொகை எடுத்துரைக்கிறது. மண் வளத்தைப் பாதுகாக்க இயற்கைமுறையைக் கையாண்டதை அறியமுடிகிறது. தமிழருக்கு உழவோடு ஆன உறவு பல ஆயிரம் ஆண்டுகளாகத் தொடரும் ஒன்று வாழ்வியல் முறையையும் அறநெறி பற்றியும் கூறும் உலகப் பொதுமறையான திருக்குறள். உலகின் முழுமுதற் தொழிலாகிய வேளாண்மை தொழில் நுட்பம் பற்றிய கருத்துக்களை அறியமுடிகிறது.

**உழுதல்**

விதையும் வளர்ச்சி நிலையம்

காலத்திற்கு ஏற்றவாறு விதைப்பதால் செல்லும் அதிகரிக்கும் என்று கூறுகின்றனர். உழவுத் தொழில் செய்கின்றவர்கள் தன்னுடைய தொழிலை விட்டு விட்டால் நாடு பெரிய இழப்பைச் சந்திக்கும். மனிதனுக்கு அடிப்படை வேளாண்மை, அதனை வள்ளுவர் உழவின் முக்கியத்துவத்தைப் பதிவு செய்திருக்கிறார்.

"உழவினர் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேன் என பார்க்கும் நிலை" குறள்-1036

என்ற குறட்பாவின் மூலம் அறியமுடிகிறது. தொழிலில் மிக சிறப்பான தொழிலாக வேளாண்மை இருக்கிறது.

"களர்படு கூவல் தோண்டி நாளும்
புலைத்தி கழீஇய தூவெள் அறுவை" (புறநானூறு, 311-11,12)

எந்த வித வேளாண்மை பயன்பாட்டிற்கும் உதவாத நிலத்தினை களர்நிலம் நிலம் என்று கூறுகின்றனர். நிலத்தைப் பதப்படுத்தி அதை விவசாயத்திற்கு தயார் செய்வதில் தமிழர்கள் கைதேர்ந்தவர்களாக இருந்தனர். நிலத்தின் தன்மையை அறிந்து அதற்கு ஏற்ப செயல்கள் புரிந்தனர். நிலத்தை ஏரினால் உழுவதின் மூலம் மண்ணில் காற்றோட்டம் அதிகமாக கிடைத்து பயிர் முளைப்பதை அதிகப்படுத்துகிறது.

"பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பார்
அலகுடை நீழ லவர்" குறள்-1034

உழுவதால் தானிய வளமும் அதனால் அருளும் உடைய உழவர்கள் தம் குடையின் கீழ்க் கொண்டு வரும் வலிமை படைத்தவர்களாகக் கூறுவதனை அறியமுடிகிறது. இதனால் திருக்குறளில் வேளாண்மை வாழ்வாங்கு வாழ வழிசெய்வதனை அறிய முடிகிறது.

**பார்வை நூல்கள்**

1. திருக்குறள். புலியூர்க் கேசிகன் (உ.ஆ.). பும்புகார் பதிப்பகம். சென்னை.

2. புறநானூறு அ.மா.பரிமணம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், அம்பத்தூர், சென்னை.

முதற்பதிப்பு - ஏப்ரல் 2004,

3. கலித்தொகை, மு.அவிசுவநாதன். .(உ.ஆ.) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், அம்பத்தூர், சென்னை. முதற்பதிப்பு - ஏப்ரல் 2004,